## சுருக்கம்

நில எடுப்பு – சென்னை மாவட்டம் – எழும்பூர் – நுங்கம்பாக்கம் வட்டம், புலியூர் கிராமம், பிளாக் எண்.1, நகர அளவை எண்கள்.8/6, 8/11 மற்றும் 8/109 – 2880 சதுர அடி தனியார் நிலங்களை வினாயகபுரம் 2வது மற்றும் 3வது தெருவிற்கு இணைப்பு சாலை அமைக்க ரூ.73,62,700/– செலவில் கையகப்படுத்துதல் – தமிழ்நாடு நில எடுப்பு சட்டம் 1894, பிரிவு 17 (2) ன் கீழ் நிர்வாக ஒப்புதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை

அரசு ஆணை (நிலை) எண்.159 — நாள்: 10.08.2010

ஆடி – 25,
திருவள்ளுவர் ஆண்டு – 2041

படிக்க:

முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கடித எண்.எம்2/19940/2009, நாள் 20.10.2009 மற்றும் 24.03.2010

* * * * *

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட சென்னை முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் கடிதங்களில் சென்னை மாவட்டம், எழும்பூர் – நுங்கம்பாக்கம் வட்டம், புலியூர் கிராமம், பிளாக் எண்.1, நகர அளவை எண்கள்.8/6, 8/11 மற்றும் 8/109 ல் 2880 சதுர அடி தனியார் நிலங்களை வினாயகபுரம் 2வது மற்றும் 3வது தெருவிற்கு இணைப்பு சாலை அமைக்க கையகப்படுத்த தமிழ்நாடு நில எடுப்பு சட்டம் 1894, பிரிவு 17 (2) ன் கீழ் அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்க கோரி சென்னை மாவட்ட ஆட்சியர் செயற்குறிப்பு அனுப்பி உள்ளார் எனவும், இந்நேர்வில் நில எடுப்பு செய்யப்படவுள்ள புலங்கள் தமிழ்நாடு நகர்புற நில உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல் சட்டம், 1978 ன் கீழ் கவரப்படவில்லை என நகர்புற நிலவரி உதவி ஆணையர், தியாகராய நகர், சான்றளித்துள்ளார் எனவும், மேற்படி நில எடுப்பிற்கு தேவையான நிலங்கள் ரயத்துவாரி மனையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும் இந்நில எடுப்பிற்கான செலவினம் சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும். இதற்கான தோராய செலவினம் ரூ.73,62,700/– என கீழ்கண்டுள்ளவாறு கணக்கிடப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| (i) | சதுர அடி 1க்கு ரூ.1800/– வீதம் 2880 சதுர அடி நிலத்தின் மதிப்பு | ரூ.51,84,000/– |
| (ii) | சுற்றுசுவர் மதிப்பு (தோராயமாக) | ரூ.1000/– |
| | மொத்தம் | ரூ.51,85,000/– |
| | 30% ஆறுதல் தொகை | ரூ.15,55,500/– |
| | 12% கூடுதல் சந்தை மதிப்பு (ஒரு வருடத்திற்கு) | ரூ.6,22,200/– |
| | ஆக மொத்தம் | ரூ.73,62,700/– |

மேலும் இந்நேர்வில் 2880 சதுர அடி தனியார் நிலத்தினை கையகபடுத்த சென்னை மாநகராட்சி மன்றம் தீர்மானம் எண்.407/2009, நாள் 29.10.2009 ல் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது எனவும் தெரிவித்து, மேற்படி சென்னை மாவட்ட ஆட்சியரின் கருத்துருவினை முதன்மைச் செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

2. முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து சென்னை மாவட்டம், எழும்பூர் – நுங்கம்பாக்கம் வட்டம், புலியூர் கிராமம், பிளாக் எண்.1, நகர அளவை எண்கள்.8/6, 8/11 மற்றும் 8/109 ல் 2880 சதுர அடி தனியார் நிலங்களை வினாயகபுரம் 2வது மற்றும் 3வது தெருவிற்கு இணைப்பு சாலை அமைக்க தோராயமான நில மதிப்பு ரூ.73,62,700/– (ரூபாய் எழுபத்து மூன்று இலட்சத்தி அறுபத்திரண்டாயிரத்து எழுநூறு மட்டும்) செலவில் தமிழ்நாடு நில எடுப்பு சட்டம் 1894, பிரிவு 17 (2) ன் கீழ் கையகப்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்கி இந்நில எடுப்புக்கு ஆகும் செலவினத்தை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் நில எடுப்பு செய்ய அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணை வருவாய், நிதித் துறை ஆகியவற்றின் இசைவுடன் அவற்றின் அ.சா.கு.எண்.24443/நிநி2/10–1, நாள் 07.06.2010 மற்றும் 31911/ந.நி.ம.கு.வ/10–1, நாள் 30.06.2010 ன் படி வெளியிடப்படுகிறது.

**/ ஆளுநரின் ஆணைப்படி /**

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்:
முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை – 5
மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம், சென்னை – 1
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3

<u>நகல்:</u>
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர், சென்னை – 9
மாண்புமிகு நிதியமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9
மாண்புமிகு வருவாய் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9
வருவாய் (நி.மு.4/நி.நி.2) துறை, சென்னை – 9
நிதி (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) துறை, சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளரின் தனி செயலர், சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை – 9
இருப்பு கோப்பு / உதிரி நகல்

**/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /**

**பிரிவு அலுவலர்**